மின்னிதழ்

# தேசியம்

www.thesiyamnews.com

THESIYAM தේසියම්

WELLA HAIR DRESSING
WELLA
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

குரல் - 91 | 26.06.2023 (திங்கட்கிழமை) | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 7 | ஊக்குவிப்பு : ரூ.30.00

## ஐ.நா. உயர்ஸ்தானிகரின் அறிக்கை

# அரசாங்கத்துக்கு சிவப்பு எச்சரிக்கை!

## தமிழ்த் தலைவர்கள் வரவேற்பு!!



பக்கம் 4

இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக பொறுப்பு க்கூறலை தவிர்த்து வருகின்ற நிலையில், ஒரு சிவப்பு எச்சரிக்கையாக அமைந்துள்ள ஐ.நா. உயர்ஸ்தானிகரின் வாய்மூலமான அறிக்கையை தாம் வரவேற்பதாக தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன், இலங்கை அரசாங்கத்தை பொறுப்புக்கூறச் செய்வதற்கான அழுத்தத்தினை ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச நாடுகள் வலுவாக பிரயோகிக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை 53ஆவது கூட்டத் தொடரில் இலங்கையில் நல்லிணக்கம், நீதி, பொறுப்புக்கூறலை உறுதி செய்தல் தொடர்பிலான உயர்ஸ்தானிகர் வாய்மொழி மூலமான அறிக்கையை வெளியிட்டுள்ள நிலையில், அது குறித்து கருத்து வெளியிடும்போதே தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது,

## 75 ஆண்டுகளாகத் தமிழர்களை ஏமாற்றும் சிங்களத் தலைவர்கள்: ஸ்ரீநேசன் சீற்றம்




தமிழர்களின் 50 சத வீதமான பிரச்சினைகளைத் தீர்த்து விட்டதாக, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தவறான கருத்தினை வெளியிட்டுள்ளார் என்று மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.ஸ்ரீநேசன் தெரிவித்துள்ளார். அண்மையில் சர்வதேச ஜனநாயக ஒன்றியத்தின் தலைவர் ஸ்ரீபன் கூப்பரை லண்டனில் சந்தித்தபோது இந்த தவறான கருத்தினை வெளியிட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இது தொடர்பில் ஜி. ஸ்ரீநேசன் கூறியுள்ளதாவது, இறுதி யுத்தம் 2009 மே மாதத்தில் நிறைவடைந்தது.இந்த இறுதி யுத்த காலத்தில், தமிழ் மக்கள் மீது பாரிய அராஜக வன்மங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன. பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டும் இருந்தார்கள். இவ்விடயம் தொடர்பாக உண்மைகள் கண்டறியப்படவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கப்படவில்லை. நல்லிணக்க சூழல் உருவாக்கப்படவில்லை.

காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் உறவுகள் தொடர்பாக நீதி கிடைக்கவில்லை. பாரிய குற்றமிழைத்த குற்றவாளிகள் கண்டறியப்படப்படவில்லை, அவர்கள் தண்டிக்கப்படவில்லை.

பக்கம் 4

## கோட்டாபய ராஜபக்ஷவை இந்த அரசாங்கம் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்துவது சாத்தியமற்ற விடயம் ஜஸ்மின் சூக்கா



பக்கம் 4

இலங்கைஅரசாங்கம் கோட்டாபாய ராஜபக்சவை பொறுப்புக்கூறச்செய்வது என்பது மிகவும் சாத்தியமற்ற விடயம் என சர்வதேச உண்மை நீதிக்கான திட்டத்தின் நிறைவேற்று பணிப்பபாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

ஜூரிஸ்ட் இணையத்தளத்திற்கு இதனை அவர் தெரிவித்துள்ளார்.

போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் போன்ற பாரதூரமான மீறல்களில்



## ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இருந்து இலங்கை தப்பமுடியாது! – அமெரிக்கா உறுதி

இலங்கையில் நல்லிணக்கம், நீதி, மற்றும் பொறுப்புகூறலை உறுதி செய்வதற்காக, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் நிகழ்ச்சி நிரலில் தொடர்ந்தும் இலங்கையை நிலைநிறுத்துவதில் தாம் உறுதியாக இருப்பதாக அமெரிக்கா திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

அத்துடன், தமிழ் மக்களுக்கான அதிகாரப்பகிர்வு உள்ளிட்ட எதிர்கால செயற்பாடுகளில், இந்தியாவுடன் கூட்டிணைந்து பரந்துபட்ட அளவில் சில நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அண்மையில் அமெரிக்காவின் சி.ஐ.ஏ. பிரதானி வில்லியம் பேர்ன் தலைமையிலான தேசிய பாதுகாப்பு குழுவினர், இலங்கைக்கு நேரில் விஜயம் செய்து குறிப்பிட்ட மணித்தியாலங்கள்

பக்கம் 4

## போரினால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உதவ முன்வாருங்கள்

### ஈழத்தமிழர் பேரவை அழைப்பு

இனப்படுகொலையின் விளைவாக பெண் தலைமைத்துவ வாழ்வுக்கு உள்ளாக்கப்பட 90 ஆயிரம் ஈழத்தமிழ் பெண்களும் அவர்களது குடும்பங்களை சேர்ந்த 2இலட்சத்து 50 ஆயிரம் சிறுவர்களும் கடந்த 14 ஆண்டுகளில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டுள்ளதாக கவலை வெளியிட்டுள்ள ஐக்கிய இராச்சியத்தின்

பக்கம் 4

# இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் தேசிய தலைமையகத்திற்கு புதிய தலைவர்!



இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் தேசிய தலைமையகத்தின் தலைவராக கே. பால கிருஸ்ணன் நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் யாழ்ப்பாண கிளையின் முன்னை நாள் கௌரவ தலைவராகவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சிக்கு பெருமை சேர்த்த வீராங்கனைக்கு சிறப்பு வரவேற்பு!



இந்தியாவில் புதுடில்லியில் கடந்த 18.06.2023 நடைபெற்ற சர்வதேச சம்பியன்ஷிப் கராத்தே சுற்றுப் போட்டியில் வெண்கலம் வென்ற மாணவியே இவ்வாறு வரவேற்கப்பட்டார்.

இந்த போட்டியில் 12 சர்வதேச நாடுகள் பங்கு பெற்றிருந்தது. இதில் இலங்கை சார்பில் போட்டியிட்ட தவராசா சானுயா வெங்கலப்பதக்கத்தினை வென்று கொடுத்துள்ளார்.

நேற்றையதினம் அவரை வரவேற்கும் நிகழ்வு கிளிநொச்சியில் இடம்பெற்றது. கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரனிடம் ஆசியினை பெற்றதுடன், தொடர்ந்து மாகாதேவா ஆச்சிரமம் முன்றலின் கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தல்கள் ஆணைக்குழுக்கு முன்மொழியப்பட்ட தமிழரின் பெயர்!



தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு புதிதாக தெரிவு செய்யப்பட்ட ஐந்து உறுப்பினர்கள் தொடர்பான அறிக்கை எதிர்வரும் சில தினங்களில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்படும் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

இதன்படி தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு புதிய உறுப்பினர்களை ஜனாதிபதி நியமிப்பார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த ஐந்து பேரில் சட்டத்தரணி அமீர் பைஸ் மற்றும் பேராதனை பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானம் தொடர்பான கலாநிதி ரமேஷ் ராமசாமி அவரது பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

# யாழ். புங்குடுதீவில் 500 தூண்களுடன் பிரமாண்டமாக கட்டப்பட்டுள்ள கண்ணகை அம்மன் ஆலய குடமுழுக்கு!



யாழ்ப்பாணம் - புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோவில் என அழைக்கப்படும் ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாளுக்கு புனராவர்த்தன அஷ்டபந்தன சமர்ப்பண ஏகோன்ன பஞ்சாசத் (49) குண்டபஷ மஹாயாக, மஹா கும்பாபிஷேக பெருவிழா நேற்று (25) காலை பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

ஐந்து இராஜகோபுரங்களுடன் 500 தூண்களுடன் பிரமாண்டமாக கட்டப்பட்டுள்ள அழகிய ஆலயமாக புங்குடுதீவு கண்ணகி அம்மன் ஆலயம் வர்ணிக்கப்படுகின்றது.

புங்குடுதீவிற்கே இந்த ஆலயம் வரலாற்று பெருமை மிக்க ஆலயமாக கருதப்படுகின்றது.

இந் நிலையில் கண்ணகி அம்மன் என வழங்கும் ஸ்ரீராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலய திருக்குடமுழுக்கு விழா நேற்று சிறப்பாக இடம் பெற்றது.

# இலங்கை : மனிதப்புதைகுழி அகழ்வின்போது சர்வதேச கண்காணிப்பாளர்களை அனுப்புங்கள் : பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள்!



இலங்கையில் மனிதப்புதைகுழிகள் அகழ்வு செய்யப்படும்போது அங்கு சர்வதேச கண்காணிப்பாளர்கள் அனுப்பிவைக்கப்படவேண்டுமென பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் அந்நாட்டு அரசாங்கத்திடமும் ஏனைய சர்வதேச நாடுகளிடமும் வலியுறுத்தியுள்ளனர்.

சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டம், இலங்கையில் ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர்கள், காணாமல்போனோர் குடும்ப ஒன்றியம் மற்றும் மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்தி நிலையம் ஆகிய 4 அமைப்புக்களும் ஒன்றிணைந்து "இலங்கையிலுள்ள பாரிய மனிதப்புதைகுழிகளும், வெற்றியடையாத அகழ்வுப்பணிகளும்" என்ற தலைப்பில் விரிவான அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளன.

அவ்வறிக்கையில் செம்மணி, மாத்தளை, மன்னார், சூரியகந்த உள்ளடங்கலாக நாட்டின் பல்வேறு பாகங்களிலும் உள்ள மனித புதைகுழிகள் குறித்தும் அவற்றை அகழ்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் மற்றும் தடைகள் என்பன பற்றியும் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. குறிப்பாக மாத்தளை மனிதப்புதைகுழி அகழ்வின் போது முன்னாள் பாதுகாப்பு செயலாளரும் ஜனாதிபதியுமான கோட்டாபய ராஜபக்ஷவினால் மேற்கொள்ளப்பட்ட தலையீடுகள் குறித்து அதிர்ச்சியூட்டும் தகவல்கள் அவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவ்வாறானதொரு பின்னணியில் அவ்வறிக்கையை மேற்கோள்காட்டி தமது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கங்களில் செய்திருக்கும் பதிவுகளிலேயே பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளனர்.

அதன்படி, இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்படல் மூலம் தமது அன்பிற்குரியவர்களை தொலைத்த பல தமிழர்கள் பிரித்தானியாவில் வாழ்வதாக சுட்டிக்காட்டியிருக்கும் அந்நாட்டு பாராளுமன்ற உறுப்பினர் சியோபைன் மெக்டொனாக், "இலங்கையில் மனிதப்புதைகுழிகள் தொடர்பில் முறையான ஆதார சேகரிப்பு இடம்பெறுவதை உறுதிப்படுத்துவதற்கு நாம் சர்வதேச கண்காணிப்பாளர்களை அனுப்பிவைக்க வேண்டும்" என்று வலியுறுத்தியுள்ளார்.

அதேபோன்று பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் விரேந்திர ஷர்மாவும் மேற்குறிப்பிட்டவாறான வலியுறுத்தலை செய்திருக்கின்றார்.

"இலங்கையில் இடம்பெற்ற வலிந்து காணாமலாக்கப்படலால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுடனான எமது ஒருமைப்பாட்டினை வெளிப்படுத்துகின்றோம். இலங்கையில் மனிதப்புதைகுழி அகழ்வின் போது சர்வதேச கண்காணிப்பாளர்கள் அங்கு பிரசன்னமாவதை உறுதிப்படுத்துமாறு எமது அரசாங்கத்திடமும், ஏனைய சர்வதேச நாடுகளிடமும் கோருகின்றோம். உண்மையை அறிந்துகொள்வதற்கான உரிமை பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உள்ளது " என்று அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.



# கடலட்டை பண்ணைகளுக்காக வடக்கு கடல் பகுதிகள் சீனாவால் ஆக்கிரமிப்பு :

## மீன் இனங்களை எதிர்கால சந்ததியினர் கண்காட்சிகளில்தான் பார்க்க வேண்டும் : மெசிடோ நிறுவனம்



கடலட்டை பண்ணைகளுக்காக வடக்கு கடலின் ஆழம் குறைந்த பகுதிகளை சீனாவின் பினாமி நிறுவனங்கள் ஆக்கிரமிக்குமானால், எதிர்கால சந்ததியினருக்கு மீன்களை கண்காட்சி நிகழ்வுகளில்தான் காட்ட முடியும் என மெசிடோ நிறுவனத்தின் உத்தியோகத்தர் விவேகி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் சனிக்கிழமை (24) உலக வங்கியின் அறிக்கை தொடர்பாக கடற்தொழில் சங்கப் பிரதிநிதிகளுக்கு தெளிவுபடுத்தும் நோக்கில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் வளமான கடல் பகுதிகளில் கடல் வேளாண்மை என்ற பெயரில் அட்டை பண்ணைகள் விரிவுபடுத்தப்படுகின்றன.

பாரம்பரியமாக கடல் தொழிலில் ஈடுபட்ட மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தை கொண்டு நடத்த முடியாத நிலையில், அவர்கள் மாற்றுத் தொழில்களுக்கு செல்லவேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், மீன் இனங்கள் இனப்பெருக்கம் செய்ய முடியாத அளவுக்கு கடல் சேற்றுக்கடலாக மாற்றப்பட்டு வருவதால், எமது எதிர்கால சந்ததியினருக்கு மீன் இனங்களை காட்ட முடியாத சூழ்நிலை உருவாகும்.

தற்போது அலங்கார மீன்கள் கண்காட்சிக்காக வைக்கப்படும் நிலையில், நாம் காலங்காலமாக கடல் உணவாக உண்டு வந்த மீன்களை, மீன் கண்காட்சிகளில்தான் எமது எதிர்கால சந்ததியினருக்கு காட்டவேண்டிய சூழ்நிலை ஏற்படப் போகிறது.

மீன் உற்பத்திக்கு, கருவாட்டு உற்பத்திக்கு பெயர் போன மன்னார் மாவட்டத்தில் கோழிகளுக்கு உணவாக போடுகின்ற மண்டத்திரலி மற்றும் செங்கன்னியை உணவு தேவைக்காக இன்று மக்கள் பயன்படுத்துகின்றனர்.

அது மட்டுமல்லாமல், சீனாவில் இருந்து பிளாஸ்டிக் முட்டைகள் இறக்கப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. சீனா செயற்கை மீன்களையும் உணவுக்காக உற்பத்தி செய்து சந்தைப்படுத்துகிறது.

வடக்கில் இயற்கையாக மீன் இனங்கள் கிடைக்கும் கடல் பகுதிகளை ஆக்கிரமித்து தனது நாட்டுக்கு தேவையான அட்டைகளை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் நிலையில் எமது மக்கள் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன்களை உணவாக உட்கொள்கின்றனர்.

இயற்கை நீரோட்டங்களை மறித்து, கடலட்டை பண்ணைகள் அமைக்கப்பட்டு வருவதால் மீன் இனப்பெருக்கம் குறைவடைந்துள்ள நிலையில், பிடிபடும் மீன்கள் வெளிநாடுகளுக்கும் ஆடம்பர விடுதிகளுக்கும் அனுப்பப்படுகின்றன.

ஆகவே, வட பகுதியில் மட்டுமல்ல, இலங்கையிலும் யாரும் உணவுத் தேவைக்காக பயன்படுத்தாத கடலட்டையை "டொலர் பெறப் போகுறோம்" எனக் கூறி அந்நிய நாட்டவர்களுக்கு கொடுத்து, எமது கடல் வளத்தை அழிக்க இடங் கொடுக்கக் கூடாது என அவர் தெரிவித்தார்.

# யாழ்.பல்கலைக்கழகத்தில் 3 பேருக்குப் பேராசிரியர்களாகப் பதவி உயர்வு!



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மூவர் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். பொறியியல், விவசாயம் மற்றும் இந்து கற்கைகள் ஆகிய பீடங்களைச் சேர்ந்த மூன்று சிரேஷ்ட விரிவுரையாளர்களைப் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை நேற்று ஒப்புதல் வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை, துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களின் மதிப்பீடு, நேர்முகத் தேர்வு முடிவுகள் நேற்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அவற்றின் படி, பொறியியல் பீடத்தின் மின் மற்றும் இலத்திரனியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி எம். கே. அகிலன் மின் மற்றும் இலத்திரனியல் துறையில் பேராசிரியராகவும், விவசாய பீடத்தின் விவசாய உயிரியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி க. பகீரதன் விவசாய உயிரியல் துறையில் பேராசிரியராகவும், இந்து கற்கைகள் பீடத்தின் இந்து நாகரிகத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி (திருமதி) விக்னேஸ்வரி பவநேசன், இந்து நாகரிகத் துறையில் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

# நீங்கள் செய்யும் மக்கள் சேவையால் உங்கள் உயிர் காப்பாற்றப்பட்டது :

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன் கூறிய கிராம அலுவலர்!



பல தடவை உங்கள் உயிருக்கு அச்சுறுத்தல் வந்த போதும் நீங்கள் செய்யும் மக்கள் சேவை தான் உங்களை காப்பாற்றியுள்ளதாக கிராம அலுவலர் ஒருவர் அமைச்சர் டக்ளஸ் முன்னிலையில் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட கிராம அலுவலர்களுக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையிலான கலந்துரையாடலின் போதே இவ்வாறு கருத்து தெரிவிக்கப்பட்டது.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களின் இக்கட்டான காலங்களில் பல சேவைகளை ஆற்றியுள்ளீர்கள் ஆதலால் தான் உயிர் அச்சுறுத்தல்கள் வந்த போதும் நீங்கள் காப்பாற்றப்பட்டுள்ளீர்கள்.

கிராம சபையாளர்கள் என்ற வகையிலே எங்களுக்கும் பல பிரச்சினைகள் உள்ளது அதனை நீங்கள் தீர்த்து வைக்க வேண்டும்.

அரசாங்கத்தில் இருந்து வரும் எந்த ஒரு கேள்விக்கும் பதிலளிக்க வேண்டிய அலுவலர்களாக கிராம சேவையாளர்கள் காணப்படும் நிலையில் எங்களுக்கான நிரந்தர கடமைப்பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும்.

ஒரு வருடத்தில் காகிதாகி செலவுக்காக 1500 ரூபாய் கொடுக்கப்படுகிறது குறித்த நிதியில் தான் தும்புத்தாடி தொடக்கம் விளக்குமாறு வரை வேண்டுகிற நிலையில் குறித்த நிதியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எமது அலுவலகத்திற்காக தரப்படும் நிதி கூட தற்போதைய சூழ்நிலையில் போதாமை காரணமாக எமது சம்பளத்தில் இருந்தே கட்டட வாடகைப் பணத்தையும் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

ஆகவே அமைச்சரவை அந்தஸ்சு உள்ள அமைச்சர் என்ற வகையில் எமது நியாயமான கோரிக்கைகளை அரசாங்கத்துடன் பேசி தீர்வு பெற்றுத்தர வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டது.

# இங்கே சூனியம் வைக்கப்பட்டுள்ளது..! விபத்து நிச்சயம் :

## யாழில் ஒட்டப்பட்ட விசித்திரமான அறிவித்தலால் பரபரப்பு







வீதியில் குப்பைகள் கொட்டுவது பொதுவாக நம்மவர்கள் எல்லோரிடமும் உள்ள கெட்ட பழக்கம். வீட்டிலுள்ள குப்பைகளை எடுத்துச் சென்று வேறு யாருடையதோ வீட்டுக்கு அருகில் வீதியோரம் வீசிச் செல்பவர் பலர் உள்ளனர்.

சூழலை பாதுகாக்க வேண்டியது அனைவரதும் கடமை என்பதை நாம் அறிவோம்.

அதனால்தான் இங்கே குப்பை போடாதீர்கள் அறிவிப்பு எல்லா வீதிகளிலும் உள்ளது. ஆனாலும் அதை நம்மவர்கள் கண்டுகொள்வதில்லை. இப்படியானவர்களிற்கு இன்னொரு உத்தியை கடைப்பிடித்துள்ளார் யாழ்ப்பாணவாசியொருவர். யாழ்ப்பாணம், நாச்சிமார் கோயில் வீதியிலுள்ள வீடொன்றின் முன்பாக விசித்திரமான அறிவித் தல் காணப்படுகிறது.

அதில் "சூனியம் வைக்கப்பட்டுள்ளது. வாகன விபத்து நிச்சயம் ஏற்படும். தயவு செய்து வீதிகளில் குப்பை கொட்டாதீர்கள்" என எழுதப்பட்டுள்ளது. இதை ஒருவர் புகைப்படம் எடுத்து சமூக ஊடகத்தில் பதிவிட, அது தற்போது வைரலாகி வருகிறது.

# யாழில் கூட்டமைப்பின் முன்னாள் எம்.பி. நடராஜா ரவிராஜின் 61வது ஜனன தினம்!





தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் நடராஜா ரவிராஜின் 61ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு யாழ்.சாவகச்சேரியில் அமைந்துள்ள அன்னாரது உருவ சிலைக்கு நேற்று மலர் மாலை அணிவித்து சுடரேற்றப்பட்டது.

இந்த நிகழ்வில் சசிகலா ரவிராஜ், சமூக செயற்பாட்டாளர் க. அருந்துவபாலன், சே.தமிழமுதன் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



## ஐ.நா. உயர்ஸ்தானிகரின் அறி...

**சி.வி.விக்னேஸ்வரன்**

தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவிக்கையில்,

ஐ.நா. உயர்ஸ்தானிகரின் வாய்மூலமான அறிக்கையானது, பொருளாதார ரீதியில் நெருக்கடிகளை சந்தித்துள்ள மக்களை மேலும் துன்புறத்தாமல், நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் கட்சிகளுடன் முன்னெடுத்துள்ள பேச்சுவார்த்தையும் வரவேற்கப்பட்டுள்ளது. குறிப்பாக, ஜனாதிபதி எம்முடனான பேச்சுவார்த்தையின்போது, அரச திணைக்களங்களினால் அபகரிக்கப்படும் காணிகள் பற்றி கரிசனை செலுத்தியிருந்தார்.

விசேடமாக வனத் திணைக்களம் 1985ஆம் ஆண்டு இருந்தவாறான வரைபடத்துக்குரிய காணிகளையே பரிபாலனம் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தார். ஆகவே, ஐ.நா. உயர்ஸ்தானிகர் வரவேற்றுள்ள நிலையில் அந்த விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

அடுத்து, பொறுப்புக்கூறல் விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. பொறுப்புக்கூறல் செய்யப்படாமல் எவ்விதமான எதிர்கால முன்னேற்றங்களையும் காணமுடியாது என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு பொறுப்புக்கூறல் நீதியாக முன்னெடுக்கப்பட வேண்டுமாயின், சுயாதீனமான விசாரணையொன்று முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது எமது நிலைப்பாடாகும்.

மேலும், பயங்கரவாத தடைச் சட்ட விடயத்தில் எனது நிலைப்பாட்டுக்கு அமைவான விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அரசியலமைப்பில் காணப்படுகின்ற குற்றவியல் சட்டம் மட்டுமே போதுமானதாகும். ஆகவே, பயங்கரவாத தடைச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்பதோடு, புதிய சட்டமும் அவசியமில்லை என்பதை உயர்ஸ்தானிகர் ஆணித்தரமாக கூறியுள்ளமை வரவேற்கத்தக்கது.

அதேநேரம், இந்த வாய்மொழி அறிக்கையில் போர் நிறைவுக்கு வந்து 14 ஆண்டுகளாகின்றபோதும், வடக்கு, கிழக்கில் உள்ள படையினர் வெளியேற்றப்படவில்லை என்ற விடயத்தினை சுட்டிக்காட்டியிருக்கலாம். ஆனால், அந்த விடயம் உள்ளீர்க்கப்படவில்லை.

அதேபோன்று எஞ்சியுள்ள அரசியல் கைதிகளுக்கான விடுதலையையும் அழுத்தமாக கூறியிருக்கலாம். ஆனால், அவ்விடயங்கள் கூறப்படாமை மனவருத்தத்தினை தருவதாக உள்ளது.

**சுமந்திரன்**

இலங்கை தமிழரசு கட்சியின் ஊடகப் பேச்சாளரும், வெளி விவகாரங்களுக்கான செயலாளருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவிக்கையில்,

ஐ.நா.உயர்ஸ்தானிகரின் வாய்மூலமான அறிக்கையானது, மிகக் காட்டமானதாக வெளிவந்துள்ள நிலையில் அதனை நாம் முழுமையாக வரவேற்கின்றோம்.

மிக முக்கியமாக இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக பொறுப்புக்கூறல் விடயத்தில் அசமந்தமான போக்கினை பிற்பற்றி வருகின்றமை பகிரங்கமாக உயர்ஸ்தானிகர் தனது வாய்மொழி மூலமான அறிக்கையில் வெளிப்படுத்தியுள்ளார்.

அத்துடன், பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்ந்து அமுலில் இருப்பதையும், அது நீக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், புதிய பயங்கரவாத தடைச் சட்டம் சர்வதேச தரங்களைக் கொண்டதாக காண்பிக்கப்படுகின்றபோதும் அதில் பாரிய அடக்குமுறைகள் காணப்படுவதை வெளிப்படுத்தியுள்ளார். அது தற்காலிகமாக தாமதப்படுத்தப்பட்டுள்ள போதும் எதிர்காலத்திலும் அது நடைமுறைப்படுத்தப்படக் கூடாது என்பதை குறிப்பிட்டுள்ளார். அத்துடன், பொருளாதார முன்னேற்றங்களை காண்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக அரசாங்கம் கூறுகின்றபோதும், ஜனநாயகத்தை மீறும் வகையில் அடக்குமுறைகள் முன்னெடுக்கப்படுவதை வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழ் கட்சிகளுடன் பேச்சுக்கள் நடைபெறுகின்றபோதும் அதில் திருப்திகரமான நிலைமைகளை அடைவதற்கு அரசாங்கம் போதியளவில் அர்ப்பணிப்பினை வெளிப்படுத்தவில்லை என்பதும், காணாமலாக்கப்பட்டவர்களுக்கான அலுவலகங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளபோதும், அவை திருப்திகரமான செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், நாட்டில் நடைபெற்ற விடயங்களுக்கு பொறுப்புக்கூறப்படாமல் நல்லிணக்கம் சாத்தியமில்லை என்பது தெளிவாக கூறப்பட்டுள்ளது. ஆகவே, அரசாங்கம் பொறுப்புக்கூறலை செய்கின்ற தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வினை எட்டுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் பொருளாதார மீட்சியும் சாத்தியமில்லாத நிலைமையே ஏற்படும்.

அடுத்த கூட்டத்தொடரில் எழுத்துமூலமான அறிக்கையில் அதன் பிரதிபலிப்புக்களை அரசாங்கம் உணர்ந்துகொள்ளும். ஆகவே, உயர்ஸ்தானிகரின் வாய்மொழி மூலமான அறிக்கையை முன்னெச்சரிக்கையாகக் கொண்டு அரசாங்கம் செயற்பட வேண்டியது அவசியமாகும் என்றார்.

**கஜேந்திரகுமார்**

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிக்கையில்,

53ஆவது கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஐ.நா உயர்ஸ்தானிகரின் வாய்மொழி மூலமான அறிக்கையில் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களை மீறியமை தொடர்பிலான பொறுப்புக்கூறலில் இருந்து இலங்கை அரசாங்கம் விலகி நிற்கிறது என்ற விடயம் மிகவும் அப்பட்டமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கை அரசாங்கம் சர்வதேசத்தினை ஏமாற்றுவதற்கான உத்திகளில் ஒன்றாக ஆரம்பிக்கப்பட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கான அலுவலகத்தின் செயலற்ற தன்மையும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், பொறுப்புக்கூறலின்றி நல்லிணக்கம் சாத்தியமில்லை என்பதும் அரசாங்கத்தின் சமகால அடக்குமுறைகள் பற்றியும் குறித்த அறிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நாம் ஐ.நா. உயர்ஸ்தானிகரின் வாய்மொழி மூலமான அறிக்கையை வரவேற்கின்றோம். ஆனால், குறித்த அறிக்கையில், இலங்கை அரசாங்கத்தின் அனைத்து விதமான செயற்பாடுகளுக்கும் அடிப்படையாக இருப்பது, சிங்கள பௌத்த பேரினவாதம் தான் என்ற விடயம் வெளிப்படுத்தப்படவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.

அதுமட்டுமன்றி, தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவில்லை என்பதும், அதிகாரங்களை பகிர்வதற்கு அரசாங்கம் பின்னடிக்கின்றது என்ற விடயத்தினையும் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்கள் என்பதும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

எம்மை பொறுத்தவரையில், தமிழ் மக்கள் பாதிக்கப்பட்ட மக்கள் அவர்களுக்கு பொறுப்புக்கூறப்பட்டு, நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்பது நிலைப்பாடாகும்.

அத்துடன், இலங்கையில் நிரந்தரமான சமாதானம் ஏற்பட வேண்டுமானால், தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யக்கூடியவாறான அரசியல் தீர்வு அவசியமாகிறது.

அதனை எதிர்வரும் காலத்தில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் மற்றும் அலுவலகம் கவனத்தில்கொண்டு தமது அறிக்கைகள் தீர்மானங்களில் உள்ளீர்க்க வேண்டும் என்பது கோரிக்கையாகவுள்ளது. அதற்கான அழுத்தங்களை எமது தரப்பிலிருந்து நாம் முழுமையாக வழங்குவோம் என்றார்.

**சுரேஷ் பிறேமச்சந்திரன்**

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் ஊடகப் பேச்சாளரும், ஈ.பி.ஆர்.எல்.எப்.இன் தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிக்கையில்,

ஐ.நா. உயர்ஸ்தானிகர் தனது வாய்மூலமான அறிக்கையில், இலங்கை அரசாங்கம் நல்லிணக்கத்துக்கான முயற்சிகளை முன்னெடுப்பதாக கூறிவந்தாலும், பொறுப்புக்கூறுவதற்கு தயாரில்லாத நிலையிலேயே உள்ளது என்பதை வெளிப்படையாக கூறியுள்ளார்.

அதுமட்டுமன்றி, போரின்போதும், அதன் பின்னரும் அரசாங்கம் ஜனநாயக விரோதமான செயற்பாடுகளை முன்னெடுத்து பொதுமக்கள் மீது அடக்குமுறைகளை பிரயோகிக்கிறது என்பதையும் மிகத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார்.

உண்மையில், இலங்கை அரசாங்கத்தினை பொறுத்தவரையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை வழங்குவது தொடர்பில் கண்துடைப்புச் செயற்பாடுகளையே முன்னெடுக்கிறது. அரசியல் தீர்வு விடயத்தில் சர்வதேசத்தினை ஏமாற்றும் வகையில் சில பேச்சுக்களை முன்னெடுத்து காலங்கடத்துகிறது.

இவ்விதமான பிற்போக்குச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் அரசாங்கத்தினை இனங்கண்டு ஐ.நா. உயர்ஸ்தானிகர் தனது அறிக்கையில் அம்பலப்படுத்தியுள்ளார்.

எனினும், தற்போதைய சூழலில் ஐ.நா.வும், இலங்கையின் பொறுப்புக்கூறலை வலியுறுத்தி தீர்மானத்தினை கொண்டுவந்து நிறைவேற்ற இணை அனுசரணை நாடுகளும், ஏனைய சர்வதேச சமூகமும் ஒன்றிணைந்து இலங்கை அரசாங்கத்துக்கு உரிய அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டியது அவசியமாகிறது.

இலங்கை பொருளாதார, அரசியல் ரீதியாக ஸ்திரமற்ற நிலையில் உள்ளது.

இதிலிருந்து மீள்வதாக இருந்தால் குறித்த செயற்பாடுகள் மிகவும் அவசியம் என்பதை தொடர்ந்தும் ஆணித்தரமாக வெளிப்படுத்துவதோடு நிற்காமல், அதற்கான செயல்வடிவங்களை முன்னெடுப்பதற்குரிய அழுத்தங்களை வலுவாக பிரயோகிக்க வேண்டும் என்றார்.

## 75 ஆண்டுகளாகத் தமிழர்களை...

தமிழ் அரசியல் கைதிகள் இப்போதும் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. வடக்கு கிழக்கில் காணி அபகரிப்புகள் நிறுத்தப்படவில்லை. தமிழர்களின் கலாசார அடையாள அழிப்புகள் நிறுத்தப்படவில்லை .

தமிழர் தாயக பூமியில் சிங்கள பௌத்த மயமாக்கல் நிறுத்தப்படவில்லை. வடக்கு கிழக்கில் இராணுவக் குவிப்புகள் நிறுத்தப்படவில்லை. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்ட ஈடுகள் வழங்கப்படவில்லை.

தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படவில்லை. 13ஆவது யாப்புத்திருத்தம் கூட முழுமையாக நடைமுறைப்படுத்தவில்லை. மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படவில்லை, தமிழ் மக்களைக் கொடுமைப்படுத்திய பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவில்லை. ஊடக அடக்குமுறை, தமிழ் மக்கள் மீதான அடக்குமுறை நிறுத்தப்படவில்லை.

ஒன்றே ஒன்று மட்டும் தற்காலிகமாக நடந்திருக்கின்றது. மறைந்த தமிழ் உறவுகளை நினைவேந்துவதற்கு மட்டும் ஜனாதிபதி ரணில் இடமளித்துள்ளார். இப்படியாக எந்த பிரச்சினையும் தீர்க்கப்படாத நிலையில், 50 வீதமான தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விட்டதாக ஜனாதிபதி கூறியமை பொய்யாகவும் ஏமாற்று வித்தையாகவும் அமைந்துள்ளது.

தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் மட்டுமல்லாமல் சர்வதேச சமூகத்தையே ஏமாற்றும் நிலையில், ஜனாதிபதியின் கருத்து அமைந்துள்ளது.

75 ஆண்டுகளாகத் தமிழர்களை ஏமாற்றிய சிங்களத் தலைவர்கள் இன்னும் திருந்தவில்லை என்பதுதான் உண்மை. ஆயின் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்கும் ஆளுமை, இயலுமை சிங்களத் தலைவர்களுக்கு இல்லை என்பதே 75 ஆண்டுக் காலப் படிப்பினையாகும்.

எனவே, ஈழத்தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வானது, இந்தியா உட்படச் சர்வதேச சமூகத்திடமே உள்ளது. வடக்கு கிழக்கில் தமிழ் பேசும் மக்கள் சுயமரியாதையுடன் சுயநிர்ணய உரிமையுடன் வாழ்வதற்கான தீர்வு ஒன்றுதான் தமிழர்களின் தேவையாகவுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

## கோட்டாபய ராஜபக்ஷவை...

ஈடுபட்டவர்கள் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுவது ஜேவிபி காலத்தில் கோட்டாபய ராஜபக்ச மாத்தளைக்கு பொறுப்பாக காணப்பட்டகாலம் வரை நீள்கின்றது என்பதை மனித புதைகுழிகள் குறித்த புதிய அறிக்கை வெளிப்படுத்துகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

அன்று தொடக்கம் இன்றுவரை ஜேவிபி காலத்தில் போர்க்குற்றத்தில் ஈடுபட்டவர்களோ அல்லது யுத்தத்தின் இறுதியில் போர்க்குற்றத்தில் ஈடுபட்டவர்களோ பொறுப்புக்கூறலிற்கு உட்படுத்தப்படவில்லை எனவும் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

மாத்தளையில் இடம்பெற்ற சம்பவங்களிற்காகவோ அல்லத யுத்தமுடிவில் இடம்பெற்ற சம்பவங்களிற்காகவோ இந்த அரசாங்கம் கோட்டாபாய ராஜபக்சவை பொறுப்புக்கூறச் செய்வது என்பது மிகவும் சாத்தியமற்ற விடயம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் அதன் இருப்பிற்காகவும் ஆதரவிற்காகவும் கோட்டாபய ராஜபக்சவிற்கு கடமைப்பட்டிருப்பதே இதற்கு காரணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## போரினால் பாதிக்கப்பட்ட பெண...

ஈழத்தமிழர் பேரவை, இப்பெண் தலைமைத்துவ குடும்பங்களின் தேவைகளை பூர்த்தி செய்ய உலகத்தமிழர்களாகிய அனைவரும் ஒரு பொது வெளியில் கூட்டிணைந்து செயற்திட்டம் ஒன்றை முன்வைக்க வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளனர்.

உலகளாவிய ரீதியில் வறுமை, பாலியல் வன்கொடுமை, சுகாதாரப்பிரச்சினை, அரச இராணுவ அடக்குமுறைகள் போன்றவற்றால் சுமார் 258 மில்லியன் விதவைப்பெண்கள் பாதிக்கப்பட்டு இருபதாக தரவுகள் கூறுகின்றன. இந்நிலையில், இலங்கையில் 2009 ஆம் ஆண்டு தமிழனம் மீதான முள்ளிவாக்கால் இனவழிப்பில் ஒரு லட்சத்து 46ஆயிரம் ஈழத் தமிழர்கள் இன்னப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டனர். அதன்போது தாயையோ, தந்தையையோ அல்லது பெற்றோர்கள் இருவரையுமோ இழந்து 50 ஆயிரம் சிறுவர்கள் அனாதைகலாகப்பட்டுள்ளனர் என்பதை உலகத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறோம்.

இந்த இனப்படுகொலையின் விளைவாக பெண் தலைமைத்துவ வாழ்வுக்கு உள்ளாக்கப்பட 90 ஆயிரம் ஈழத்தமிழ் பெண்களும் அவர்களது குடும்பங்களை சேர்ந்த 2இலட்சத்து 50 ஆயிரம் சிறுவர்களும் கடந்த 14 ஆண்டுகளில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டுள்ளனர்.

விதவைகள் என்ற காரணத்தினால் இப்பெண்கள் சமூக ரீதியாக ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய வகிபாகத்தில் இருந்து வெளியேற்றப்படுவதால் பாலியல் சுரண்டல் மற்றும் பாலியல் இலஞ்சம் ஆகியவற்றால் பாதிக்கப்படக்கூடியவர்களாக இருக்கின்றனர். பெண் தலைமைத்துவக் குடம்பங்கள் அத்தியாவசிய சேவைகளை அணுக அல்லது வருமானம் பெற முயற்சிக்கும் போது இராணுவ மற்றும் புலனாய்வு கட்டமைப்புக்களால் பாலியல் சுரண்டல்களுக்கும், பேரம் பேசல்களுக்கும் உள்ளாக்கப்படுவதாக ஐ.நா பெண்கள் அமைப்பின் அறிக்கையொன்று கூறுகின்றது.

ஆயினும் தற்போது வரை ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்துலக சட்டங்களின் ஊடாக பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமல் இலங்கை படையினரின் அச்சுறுத்தலுடனேயே பெண் தலைமைத்துவ குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. சர்வதேச நாணய நிதியம் ஈழத்தமிழர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையை விதிக்காமல் இலங்கைக்கு அளித்துள்ள நிதியுதவி இலங்கையின் தமிழின அழிப்பு அரசியலை மேலும் ஊக்குவிக்கும் என வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் உள்ளிட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

## ஐக்கிய நாடுகள் மனித உரி...

தங்கியிருந்ததன் பின்னணியில் உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றிருந்தது.

இந்த சந்திப்பின்போதே அமெரிக்க பிரதிநிதிகள் இவ்வாறு உறுதியாக தெரிவித்திருந்தனர்.

அத்துடன், 2024 செப்டெம்பர் மாதத்துக்குப் பின்னரும் இலங்கையை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் நிகழ்ச்சி நிரலில் நிலைநிறுத்துதல், சர்வதேச சட்ட மீறல்களுக்கு பொறுப்புக்கூறுவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது.

## நேர்மையான, நேர்த்தியான சேவைக்கு பாராட்டும் கௌரவிப்பும் !!



கல்முனை மனிதவள அபிவிருத்தி அமைப்பு கல்முனை மாநகர சபையின் பிரதான திண்ம கழிவகற்றல் செயற்திட்டத்தில் தன்னை முழுமையாக அர்பணித்து முழு ஈடுபாட்டுடன் இரவு பகல் பாராது நேர்த்தியான முறையில் தனது சேவைகளை வழங்கி வரும் சுகாதார மேற்பார்வையாளர் எம். எம். முகமது ரிஸ்வான் அவர்களை பாராட்டி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தது.

கல்முனையில் அமைந்துள்ள அமைப்பின் காரியாலயத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனை மனிதவள அபிவிருத்தி அமைப்பின் தலைவர் வைத்திய கலாநிதி எம். எச். ரிஸ்பின், செயலாளர் எம்.எம்.எம். காமில் மற்றும் அமைப்பின் செயற்குழு, நிருவாக சபை உறுப்பினர்கள் மற்றும் அமைப்பின் அங்கத்தவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

கடந்த காலங்களில் ஒன்றரை லட்சம் ரூபாய் பணத்தை குப்பை பையில் தவறுலாக போட்டு, அதனை குப்பை சேகரிக்கும் வண்டிக்கு அனுப்பிய ஒருவர், பிறகு அந்தப் பணத்தை பெரும் முயற்களின் பின்னர் பெற்றுக் கொண்ட சம்பவமொன்று கல்முனைப் பிரதேசத்தில் நடந்தது. இந்த பணத்தை இழந்தவர் துரிதமாக மீளப்பெற காரணமாக அமைந்திருந்தவர் இந்த பாராட்டை பெற்ற ரிஸ்வான் என்பது குறிப்பிடத் தக்கது.

## மாவடி கந்தசுவாமி ஆலய மகாகும்பாபிஷேகம்!





காரைதீவு மாவடி ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் நேற்றுமுன் தினம் (24) சனிக்கிழமை விசேட கர்மாரம்ப கிரியைகளுடன் ஆரம்பமானது. இன்று (26) திங்கட்கிழமை முடிவடையும், நாளை (27) செவ்வாய்க்கிழமையும் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம் பெறும்.

மறுநாள் புதன் கிழமை(28) காலை 9 மணிக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறும் என ஆலய பரிபாலன சபை செயலாளர் சின்னத்தம்பி சிவகுமார் தெரிவித்தார்.

# வடக்கு கிழக்கில் தற்போது நடந்து கொண்டிருப்பது ஒரு மௌன யுத்தம். நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் தெரிவிப்பு!!

இந்த நாட்டில் தமிழ் மக்களின் விகிதாசாரத்தை குறைக்கவேண்டும் திட்டமிட்டு 1949 ம் ஆண்டு முதல் பிரதமரான டி.எஸ்.சேனநாயக்கா கிழக்கு மாகாணத்திலே கல்லோயா குடியேற்றத்தை ஆரம்பித்து வைத்த காலம் தொடக்கம் இன்று வரை தமிழ் மக்களின் காணிகள் அபகரித்து விகாரைகள் அமைக்கும் திட்டங்களை செய்து வருகின்றனா். என வடக்கு கிழக்கில் தற்போது நடந்து கொண்டிருப்பது ஒரு மௌன யுத்தம் என நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் பத்மநாபா உள்ளிட்ட தியாகிகளின் 33வது நினைவு அஞ்சலி சனிக்கிழமை (24) அனுஸ்டிக்கப்பட்டது இதில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்திய பின்னர் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழீழ விடுதலை போராட்டத்திலே பல நாட்கள் தமிழ் மக்களால் மறக்க முடியாத வடுக்கள் நிறைந்த நாளாக இருக்கின்றது. அந்த நாட்களின் ஒரு நாளாகவே 19 யூன் 1990 ம் ஆண்டு விடுதலைப் போரட்ட பாதையிலே ஒரு கறுப்பு புள்ளி விழுந்த நாளாகும்.

தமிழ் மக்கள் ஆயுத போராட்டத்தை விரும்பி ஏற்றுக் கொண்டவர்கள் அல்ல ஆயுத போராட்டம் எங்கள் மீது திணிக்கப்பட்டது இலங்கை சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து நாங்கள் தமிழினம் இரண்டாம் தர பிரஜைகளாக இந்த நாட்டிலே அழைக்கப்பட்டோம் .

இவ்வாறு தனி சிங்களசட்டம் கொண்டுவரப்பட்டதில் இருந்து தமிழர்களுக்கு எதிராக அரங்கேற்றப்பட்ட 1957, 1958, 1978, போன்ற கலவரங்களை தொடர்ந்து மிகவும் மோசமாக83 கலவரத்தை உருவாக்கி கப்பல் மூலம் வட கிழக்கிற்கு சொந்த நாட்டிலே அகதிகளை அனுப்பிய வரலாறு ஆகும்.

இவ்வாறு தமிழர்கள் மீது நடந்தேறிய இனழிப்பிற்கு எதிராக அகிம்சை மூலமாக போரடிய எமது தலைவர்கள் அதில் நம்பிக்கையிழந்து உரிமைகளை வென்றெடுப்பதற்காக நாங்கள் ஆயுத போராட்டத்திற்குள் தள்ளப்பட்டோம் அதனால் 1969 ஆயுத போராட்டம் முதல் முதல் தமிழ்ஈழ விடுதலை இயக்கம் அதில் பிரபாகரன் உட்பட போராட்டத்தின் ஆரம்ப கர்த்தாக்கள் இருந்தார்கள்

இந்த நிலையில் 83 கலவரத்தை அடுத்து ஈழவிடுதலை போராட்டம் ஒரு வித்தியாசமான பாதைக்குள் சென்றது. முன்னணியில் 5 போராட்ட இயக்கங்கள் இருந்தது அப்போது அனைவரும் ஒன்றிணைந்து போராடினால் தான் எமது இலக்கை அடையமுடியும் என 1984 ம் ஆண்டு ஈழ தேசிய விடுதலை முன்னணி என்று ஈரோஸ், ரொலே, ஈபிஆர்எல்எப். என மூன்றும் ரி.என்.எல்.எப். உருவாகியது பின்னர் விடுதலைப் புலிகளும் அதில் இணைந்தனர் என்பது வரலாறுகள்.

ஆனால் விடுதலைப் புலிகள் மாத்திரம் வட கிழக்கிலே இந்த போராட்ட பாதையில் நின்று



இருந்தாலும் 2009 மே 18 உடன் இந்த ஆயத போராட்டம் முற்று முழுதாக மௌனிக்கப்பட்டது இந்த போரட்டம் மௌனிக்கப்படும் முன்னர் பல தலைவர்களை இழந்திருக்கின்றோம் அதில் போரட்ட தலைவர்கள் மாத்திரமல்ல மிதவாத கட்சியான தழிழர் விடுதலைக் கூட்டணி தமிழரசு கட்சி போன்றவற்றின் தலைவர்கள் அமிர்தலிங்கம் உட்பட பல தலைவர்களை இழந்திருக்கின்றோம்.

ஜே,ஆர். ஜெயவர்த்தனா காலத்திலே சமாதன பேச்சுக்கே இடமில்லாமல் தமிழ் மக்களின் குரல்வலையை நசுக்கினார் 2009 வரை தமிழ் மக்களை வஞ்சித்துக் கொண்ட அரசு ஆயுத போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்பு வடகிழக்கில் வித்தியதசமான ஒரு திணிப்பை செய்துவருகின்றது.

அதுதான் தமிழர் தேசத்தில் விகாரைகள் அமைக்கவேண்டும் தமிழரின் குடிபரம்பலை எவ்வளவு வேகமாக மாற்றி அமைக்கவேண்டும் இணைந்திருந்த வடகிழக்கை வெலிஓயா குடியேற்றம் மூலம் நில தொடர்பற்ற மாகாணங்களாக இரண்டு மாகாணங்களையும் பிரிப்பது போன்ற நடவடிக்கையை திட்டமிட்டு செய்துவருகின்றது.

தற்போதைய எதிர்கட்சி தலைவாரான சஜித் நல்லாட்சி காலத்தில் புத்தசாசன அமைச்சராக இருந்தபோது வடகிழக்கில் ஆயிரம் விகாரை அமைக்கவேண்டும் என்ற அவர் தற்போது இலங்கையிலே ஆயிரம் தாது கோபுரங்களை படிப்படியாக அமைக்கவேண்டும் என கூறியுள்ளார்

ஆகவே தற்போது வடகிழக்கில் நடந்து கொண்டிருப்பது ஒரு மௌன யுத்தம் தமிழ் மக்களின் காணிகள் அபகரிப்பு தமிழர் பிரதேசங்கள் எங்கும் விகாரைகள் குறிபாக உயர்ந்த மலைகளில் அமைப்பது சுற்றுலா பயணிகள் கூட இலங்கை ஒரு பௌத்த நாடு என்பதை பறைசாற்றுவதற்காக இந்த திட்டங்களை செய்து வருகின்றனர்.

குருந்தூர் மலையிலே பூர்வீகமாக தமிழ் மக்கள் வாழ்ந்த காணிகள் இன்று தொல்பொருள் என்று பெயரில் அபகரிக்கட்டுள்ளது சரத்வீரசேகர, உதயகம்பன்வெல, விமல்வீரன்ச போன்ற அரசியல்வாதிகள் தங்களது நிரச்சி நிழலுக்குள் செயலாற்றிக் கொண்டு வடகிழக்கு மாகாணங்கள் தமிழ் தாயகம் என தம்பட்டம் அடிக்கும் தமிழர்களுக்கு எச்சரிக்கை விடுப்பதாக சரத்வீரதேசகர தெரிவித்தார்

எனவே தமிழர்களுடைய தாகம் விடுதலை நோக்கம் இன்னும் தனியவில்லை என அமைச்சருக்கு தெரியவேண்டும். அதேவேளை கோட்பாயாவின் விசுவாசியான புதிதாக தேசிய பட்டியல் மூலமாக பாராளுமன்றம் வந்த வெளிநாட்டு அமைச்சர் ஒரே இரவில் தீர்வை கொடுக்க முடியாது கிடைப்பதை பெற்றுக் கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார் எனவே இனப் பிரச்சனை தோன்றி எத்தனை ஆண்டுகள் என அவருக்கு தெரியாமல் இருக்கலாம், ஒரே இரவில் இந்த பிரச்சனைக்கான தீர்வை கேட்கவில்லை.

நாடு சுதந்திரமடைந்த காலம் இருந்தே தமிழர்கள் இனப்பரச்சனையை தீர்ப்பதற்காக தொடர்ச்சியாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம் தந்தை செல்வா பேச்சுவார்த்தை, பண்டா செல்வா ஒப்பந்தம், டட்லி செல்வா ஒப்பந்தம், மற்றும் திம்பு பேச்சுவார்த்தை, 2001 பேச்சுவார்த்தை 2009 பின் மகிந்தவுடன் 18 சுற்று பேச்சுவார்த்தை. உட்பட தற்போதும் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடந்து கொண்டுதான் இருக்கின்றது.

தற்போதைய ஜனாதிபதி ஒரு சர்வதேச அழுத்தத்தின் மத்தியிலே இந்த நாட்டை நடாத்துகின்றார் 1987 இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது அதன் மூலம் உருவாகிய குறைமாத குழந்தையான மாகாணசபை முறைமை ஏற்படுத்தப்பட்டது இந்த 13 திருத்த சட்டத்தை முற்று முழுதாக தமிழ் மக்களின் இனப் பிரச்சனைக்காக யாரும் ஏற்றுக் கொள்ள வில்லை,

ஆனால் அரசியல் அதிகாரத்தில் ஆசையற்ற பத்மநாபா கிடைப்பதை எற்றுக் கொண்டு அதிலிருந்து நாங்கள் முன்னேறிச் செல்வோம் என்ற அடிப்படையில் அந்த மாகாணசபை அதிகாரத்தை பெற்றுக் கொண்ட முதல் தலைவர் பத்மநாபா அதிகாரத்தில் ஆசையில்லாத காரணத்தால் முதலமைச்சர் பதவியை ஏற்றுக் கொள்ளவில்லை அப்படிப்பட்ட ஒரு தலைவரது ஞாபகாத்த தினம்தான் இந்த 19 யூன் என்பது,

எனவே நாங்கள் கிடைப்பதை பெற்றுக் கொண்டு எங்கள் மக்களுக்கு துரோகம் செய்வதற்கு நாங்கள் அரசியல் செய்யவில்லை. தமிழ்சேிய கூட்டடைப்பு விடுதலைப் புலிகள் இயங்கு நிலை இருந்த காலத்திலே 2001 உருவாக்கப்பட்டது அப்போது கடந்த கால கசப்பான சம்பவங்களை மறந்து தமிழ் மக்களுக்கு ஒரு பலமான அரசியல் சக்தி இருக்கவேண்டு என்ற காரணத்திற்காக இந்த கூட்டமைப்பை உருவாகினோம்.

2009 ம் வரை தமிழ் தேசிய கூட்டமைப்பு அசைக்கமுடியாத சக்த்தியாக இருந்தது 2004 தமிழ் விடுதலை கூட்டணி வெளியேறியது 2010 அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வெளியேறியது 2015 ஈபிஆர்எல்எப் வெளியேறியது அதே போன்று 2023 தமிழரசு கட்சி வெளியேறியுள்ளது ஆனால் தற்போது தமிழ் தேசிய கூட்டமைப்பு ஒரு பலமான 5 கட்சிகள் கொண்ட அணியாக செயற்படுகின்றோம். என்றார்.

# காரைதீவில் சிறப்பாக இடம்பெற்ற 33 வது தியாகிகள் தினம்!



ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் 33வது தியாகிகள் தினம் நேற்று(25) ஞாயிற்றுக்கிழமை காரைதீவு விபுலானந்தா கலாச்சார மண்டபத்தில் உணர்வு பூர்வமாக நடைபெற்றது.

நேற்று காலை 10.30 மணியளவில் அம்பாறை மாவட்ட ஈபிஆர்எல்எவ் அமைப்பாளர் எஸ். புண்ணியநாதன் (கரன் ஏற்பாட்டில் சர்மா தோழரின் தலைமையில் நடைபெற்றது. வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினா் சிவசக்தி ஆனந்தனும் கலந்து சிறப்பித்தார்.

மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்து உயிர் நீத்தவர்களின் உறவுகள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

ஜூன் 19 ஆம் தேதி தமிழகத்தில் தோழர் பத்மநாபாவும் 13 தோழர்களும் படுகொலை செய்யப்பட்ட தினத்தையே தியாகிகள் தினமாக அனுஷ்டித்து வருகிறார்கள் .

பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மறைந்த தலைவர் தோழர் பத்மநாபாவின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை சூட்டி அஞ்சலி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

33 வது தியாகிகள் தினத்திலும் உயிர் நீத்த தோழர்களின் உறவுகள் கலந்து கொள்ளுமாறு மாவட்ட அமைப்பாளர் எஸ். புண்ணியநாதன் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

தேசியம் THESIYAM

# காத்தான்குடிக்கு விஜயம் செய்த ஆளுநர் :
## ஈச்சம்பழத்தையும், குர்ஆனையும் அன்பளிப்பாக பெற்றார் !






காத்தான்குடியில் அமைந்துள்ள மஸ்ஜிதுல் அக்ஸா பள்ளிவாயலிற்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் சென்று தரிசத்ததுடன் தமிழ் மொழி, மொழி பெயர்ப்புடன் கூடிய குர்ஆன் பிரதி பள்ளிவாயல் கதீபினால் வழங்கி வைங்கப்பட்டது. கிழக்கு ஆளுநர் இறைவனின் அருளே இன்று இப்பள்ளிவாயலை தரிசிக்க கிடைத்தமை எனவும் இதையொட்டி தான் மிகவும் சந்தோஷம் அடைவதாகவும் இதன்போது தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பள்ளிவாயல் நிர்வாகிகள், கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை பணியகத்தின் பணிப்பாளர் சிரேஷ்ட ஊடகவியலாளர் ஏ.பி. மதன், பிரதேச செயலாளர் உ.உதயசிறிதர், காத்தான்குடி நகரசபை செயலாளர் றிப்ஹா சபீன், காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டதுடன் தங்களது வாழ்த்துக்களையும் மகிழ்ச்சியையும் ஆளுநருக்கு தெரிவித்தனர்.

இதனை தொடர்ந்து காத்தான்குடியில் அழகுபடுத்தும் (Beautification) நோக்கில் நடப்பட்ட பேரீச்சம் பழ இவ்வருட அறுவடை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அவர்களினால் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் முதலாவது அறுவடையை காத்தான்குடி நகரசபை செயலாளர் றிப்ஹா சபீனிடமிருந்து ஆளுநர் பெற்றுக் கொண்டார்.

இறைவனின் அருளால் விளைச்சல் சிறப்பாக உள்ளதாகவும், பள்ளிவாசல்களுக்கு விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் ஆளுநர் இதன்போது ஆலோசனை தெரிவித்தார்.

# பொதுச்சுகாதார உத்தியோகத்தர்களுக்கு
## தடுப்பூசி முகாமைத்துவ பயிற்சித்திட்டம்






தடுப்பூசிகளை திறம்பட நிர்வகிப்பதில் பொது சுகாதார பரிசோதர்கள் மற்றும் பொது சுகாதார மருத்துவச்சிகளின் அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட தடுப்பூசி முகாமைத்துவம் தொடர்பான விரிவான பயிற்சித்திட்டம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை பிராந்திய தொற்றுநோய் நிபுணர் டாக்டர் எம்.ஏ.சி.எம்.பசாலின் ஏற்பாட்டில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் தலைமையில் பணிமனை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

புகழ்பெற்ற பிராந்திய தொற்றுநோயியல் நிபுணரான டாக்டர் எம்.ஏ.சி.எம். பஸால் வளவாளராக இந் நிகழ்ச்சியில் பங்காற்றினார். இத்துறையில் அவரது நிபுணத்துவமும் அனுபவமும் பங்கேற்பாளர்களுக்கு மதிப்புமிக்க நுண்ணறிவு மற்றும் வழிகாட்டுதலை வழங்கியது. இந்த பயிற்சியானது தடுப்பூசி நிர்வாகத்தின் சேமிப்பு, விநியோகம், கண்காணிப்பு மற்றும் பாதகமான நிகழ்வு அறிக்கையிடல் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியதாக காணப்பட்டது.

இப்பயிற்சித் திட்டத்தினூடாக ஒட்டுமொத்த தடுப்பூசி முகாமைத்துவ அமைப்பை மேம்படுத்தவும், பொதுமக்களுக்கு தடுப்பூசிகளை திறம்பட வழங்குவதை உறுதி செய்யவும், இப்பகுதியில் சுகாதார உள்கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது.



# நூறு ஆண்டுக்கு மேல் பழமை வாய்ந்த ஆலய தேரோட்டம்!!






கிழக்கிலங்கையில் நூறு ஆண்டுக்கு மேல் பழமை வாய்ந்த ஆலயமான வாழைச்சேனை அருள்மிகு ஸ்ரீ கைலாயப்பிள்ளையார் தேவஸ்தான சோபகிருது வருட ஆனி உத்தர மஹோற்சவப் பெருவிழாவின் தேரோட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது வசந்த மண்டப பூசைகள் என்பன இடம்பெற்று பஞ்சமுக விநாயகர் தேரில் அமர்ந்து நூற்றுக்கணக்கில் பக்த அடியார்கள் கலந்து கொண்டு வடம் பிடித்து தேரினை இழுத்துச் சென்றனர்.

ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமான தேரோட்டம் வாழைச்சேனை பேச்சியம்மன் ஆலய வீதி, சேர்மன் கனகரெத்தினம் வீதி, பிரதான வீதி, விபுலானந்தர் வீதி மற்றும் கல்குடா வீதி வழியாக ஆலயத்தை சென்றடைந்தது.

கடந்த புதன்கிழமை மாம்பழத்திருவிழா, சனிக்கிழமை வேட்டைத்திருவிழா இடம்பெற்று நேற்று ஞாயிற்றுக்கிழமை தேர்திருவிழா இடம்பெற்ற நிலையில் நாளை திங்கட்கிழமை ஆனி உத்தர தரிசன தீர்த்தோற்சவத்துடன் உற்சவம் நிறைவுபெறவுள்ளது.

உற்சவ பூசைகள் யாவும் மஹோற்சவ கால பிரதம குரு அலங்கார பூசணம். கிரியா சிவ ஸ்ரீ.சு.வல்லிகாந்தக் குருக்கள், ஆகமபிரிவினா, பிரதிஸ்டா சாகரம் "வாமதேவ சிவாச்சாரியார், ஆர்ச்சார்ய பூசணம் சிவஸ்ரீ சபா பாஸ்கரக் குருக்கள் ஆகியோரால் இடம்பெற்றது.

வாழைச்சேனை அருள்மிகு ஸ்ரீ கைலாயப் பிள்ளையார் ஆலயம் வரலாற்றைக் கொண்ட ஆலமாகும் இங்குள்ள மூல விக்கிரகம் கைலாய மலையில் கொண்டுவரப்பட்ட கற்களால் உருவாக்கப்பட்ட ஆலமாகும் .

# புகழ்பெற்ற கல்முனை பாலிகாவுக்கு புதிய பழைய மாணவிகள் சங்கம் தெரிவானது :
## செயலாளராக சிரேஷ்ட சட்டத்தரணி ஆரிகா தெரிவானார்.

இலங்கையின் புகழ்பெற்ற பாடசாலைகளில் ஒன்றான கல்முனை கல்வி வலய கல்முனை மஹ்மூத் மகளீர் கல்லூரி (தேசிய பாடசாலை) பழைய மாணவிகள் சங்கத்திற்கான வருடாந்த பொதுக்கூட்டம் பாடசாலையின் சேர் ராசிக் பரீட் மண்டபத்தில் கல்லூரி அதிபர் யூ.எல். அமீன் தலைமையில் கல்முனை கோட்டக் கல்வி அதிகாரியும், கல்முனை கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளருமான ஏ.பி.எப். நஸ்மியா சனூஸ் உட்பட பழைய மாணவிகளின் பங்குபற்றலுடன் அண்மையில் நடைபெற்றது.

இந்த பழைய மாணவிகள் சங்கத்திற்கான வருடாந்த பொதுக்கூட்டத்தில் பாடசாலை கல்வி, பௌதீக அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடப்பட்டது டன் நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. அதில் பதவி வழியாக பாடசாலை முதல்வர் யூ. எல். அமீன் தலைவராகவும், செயலாளராக கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினரும், கல்முனை சட்டத்தரணிகள் சங்க உப தலைவருமான சிரேஷ்ட சட்டத்தரணி ஆரிகா காரியப்பரும், பொருளாளராக விரிவுரையாளர் ஏ.பி.எஸ். றிகானா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் உப தலைவராக ஷாமிலா ஜஹ்பர், உப செயலாளராக எம்.எம். உம்மு ஹபீபா, உப பொருளாளராக ஏ.சி. பஸ்லுனா, கணக்காய்வாளராக எம்.எம். சியாதா ஆகியோரும், செயற்குழு உறுப்பினர்களாக ஏ.எச்.சித்தி சபீனா, எம்.ஐ. சபானா, ஏ.எச். ஜெஷ்மின் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த புதிய நிர்வாகம் எதிர்கால பாடசாலை மேம்பாட்டு வேலைத்திட்டங்களை முன்னெடுக்க தயாராகி வருகின்றனர்.



# கிருபா லேணர்ஸ்
# කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS




**அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.**

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும். உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.




**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubaleamers@gmail.com
www.kirubaleamers.com

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | ஆவரங்கால் 021 222 6688 |
| சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 |
| விஸ்வமடு 021 320 1515 | மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |

# வெளிவந்துவிட்டது!
## தமிழர் தாயகம் எங்கும்!



வார இதழ்
# தேசியம்
www.thesiyamnews.com THESIYAM තේසියම්
# பத்திரிகை!



**கல்வி,சமூக,அரசியல் வாராந்த இதழ்!**

## வெளிவரும்
**தேசியம் வாராந்த பத்திரிகையின் விளம்பர விலைப்பட்டியல்**

தேசியம் THESIYAM තේසියම්
NEWSPAPER SIZES, RATE PER EDITION

**WEEKLY NEWSPAPER**

| BLACK & WHITE ADVERTISEMENT | | COLOUR ADVERTISEMENT | |
|---|---|---|---|
| Front Page Top | 2000/= | Front Page Top | 4500/= |
| Front Page Bottom | 4000/= | Front Page Bottom | 6000/= |
| Back Quarter Page | 6000/= | Back Quarter Page | 8000/= |
| Back Half Page | 8000/= | Back Half Page | 10000/= |
| Back Full Page | 12000/= | Back Full Page | 22000/= |
| Inner Quarter Page | 3500/= | Inner Quarter Page | 5000/= |
| Inner Half Page | 6000/= | Inner Half Page | 8000/= |
| Inner Full Page | 10000/= | Inner Full Page | 15000/= |
| Inner Box Ad | 800/= | Inner Box Ad | 1200/= |

Tel : 021 222 7557 | +94 76 567 3339
E-mail : thesiyamnews@gmail.com
Web : www.thesiyamnews.com




இப்பத்திரிகை அகரவ் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, மின்னிதழாக வெளியிடப்படுகிறது.